அத்தாமலக வுத்தரம்:—

2. நரனல்ன் சுரனி யக்க ஞனல னந்த னன்மற்
றரசனும் வணிகன் சூத்ர னெல்வனற் பிரம சாரி
கிரகியும் வானப் பிரத்தன் கேடகல் சந்நி யாசி
நிரையினி லாருமல்லே னிசபோத வடிவ னமே.

3. சூரியன் சகத்தொ ழிற்குச் சொற்றிடு நிமித்த மென்ன
யாருளஞ் சட்சு வாதி யாட்டத்திற் கேது வாவ
னொரலா வுபாதி யும்விட் டாகாயம் போலி ருப்ப
னோரிய னித்த சித்த வுருவன மவ்வான் மாநான்.

4. [illegible]ரியது வெம்மை போல வெவனித்த போத ரூப
மொருவனுக் கம்ப மின்றி யொளிர்தரு மெவனைச்சார்ந்தே
யறிவிலாக் கரண மிந்தி யாதிதந் தொழின்மேற் செல்லு
மறிவுரு நித்த சித்த னுயுள வவ்வான் மாநான்

5. அத்தத்திற் பதிப லித்த வம்முக முகத்தின் வேறோர்
வத்துவன் றதுபோற் புந்தி வருசிதா பாச சீவன்
சித்துரு வெவன்வே றாகச் சிறிதுமோர் வத்து வாகா
னத்வய நித்த சித்த னுயுள வவ்வான் மாநான்

6. அத்தமே யில்லை யாகி லம்முகா பாச மின்று
வத்துவா யுற்ற தேக வதனமே விகற்ப மின்றி
புத்தியற் றிடவே யாவன் பொலிவனு பாசமின்றி
யத்திற நித்த சித்த ஞயுள வவ்வான் மாநான்.

7 மனச்சட்சு வாதி யோடு மருவிடா திருப்பன் யாவன்
மனச்சட்சு வாதி கட்கு மனச்சட்சு வாதி யாவன்
மனச்சட்சு வாதி யாலே மருவிடப் படாதான் யாவ
னனித்தமி னித்த சித்த ஞயுள வவ்வான் மாநான்,

8. கடசலந் தோறுந் தோன்றுங் கதிரவ னொருவ னேபோ
லுடலுறு முள்ளந் தோறு மொளிரினு நாளு வாகச்
சுடருவ னொருவன் றானே சுத்தசே தனனு யாவ
னடைதலி னித்த சித்த னுயுள வவ்வான் மாநான்.

9. ஒளியதா மனேகங் கண்கட் கொருரவி யொருகா லத்தே
யொளிசெயு முலகத் தைப்போ லொருஞான வடிவன் யாவ
னொளியதா யனேகம் புத்திக்கொளிர்ப்பனிவ் வுலகந்தன்னை
யளவிலா நித்த சித்த னுயுள வவ்வான் மாநான்.

10. இரவியா லொளிருங் கண்ணே யெதிருறு முருவம் பற்று
மிரவியா லொளிரா தின்ற மிதுபோலவ் விரவி தானு
மொருவனு மெவனொளி யுற்றிங்கொளிர்ப்பனே நேத்திராதி
யருவனய் நித்த சித்த னுயுள வவ்வான் மாநான்.

11. சலசலத் தனேகன் போலச் சாருவ னேக பானு
சலனமில் சலத்திற் றனே சாருவனேக னுக
சலமதி யனேகன் போலச் சாரினு மேகன் யாவ
னலைதலி னித்த சித்த னுயுள வவ்வான் மாநான்.

12. மூடன்றன் விழியினைக்கார் மூடிட வதால ருக்கன்
மூடெபட் டொளியற் றூறு முன்னுதல் போல யாவன்
மூடனின் பார்வை யாலே முற்றுமே பெத்தன் போல்வ
ஞடலி னித்த சித்த ஞயுள வவ்வான் மாநான்.

13. அகில வத்து விடத்து மனுசூத னேக ஞகி
யகில வத்து விடத்து மசங்கனு யிருப்பன் யாவன்
ககனநேர் நித்த சுத்த களங்கமி லுருவன் யாவ
னக மிலா நித்த சித்த ஞயுள வவ்வான் மாநான்.

14. பலவித வுபாதி யாலே பலவிதம் படிகந் தோன்றும்
பலவித புத்தியாலே பலவித முனக்கு மாகுஞ்
சலமதி னிலவின் சலனஞ் சான்றாகப் பூன்ற னேயச்
சலமுறு புத்தியாலே சஞ்சல நினக்கு மாமே.

15. அத்தத்தி னெல்லி போல வான்மாவைக் காட்ட லாலீ
தத்தா மலகத் தோத்ர மாகும்பேர் பெற்ற தன்றி
யத்தா மலக னென்றவ் வறிவினிற் பெரிய பால
னித்தரை யாவ ராலு மேத்திடப் பட்டா னம்மா

இதனைக்கேட் டாச்சரியத்தாற், றன்னை மறந்து நிற்கும் பிதா வை யாசாரியர் நோக்கி "இவன் முற்றவக்குறையா லுமக்கு மக ஞனதுமது பாக்கியமே. இகத்தில் இவனாலுமக்கோர் பிரயோசன மிராது. நம்பாலிருக்கட்டும்" என்றுரைத்தவனை யனுப்பிவிட்டுத் தன்னுடன் பாலனைக் கூட்டிச்சென்றனர். பின்னர் குருவைப்பா ர்த்து "இச்சிறுவன் சிரவணாதிசாதன மின்றியிப்பிரஹ்ம நிஷ்டை யடையக்காரணம் யாதென்று" சீடர்வினவக் குருவானவர் "இவன் தாய் முன்யமுனா தீரத்திற் றவஞ்செய்யும் சர்வைசுவரிய சம்பந்ந சாதுவான சித்தயோ கியிடந்தன்னிருவயதுள்ள குழந்தையை

விட்டு மற்ற ஸ்திரீகளுடன் ஸ்நானஞ்செய்கையில் சிசுமெல்ல நடந்துபோ யந்நதியில் வீழ்ந்திறக்க அதற்காற்றாது . துக்கிக்கு மவரைத் தேற்றக்கருணை மிகுதியால் லச்சாது தம்முடலை விட்டச் சிசு வுடலில் புக வதனாலேயே இப்பெரும்பேறு பெற்ற னன்" என்று புகன்றனர்.

அத்தாமலகத்தோத்திரம்

சம்பூர்ணம்.

ஸ்ரீ

குரு துதி.

அவதாரிகை.

ஸ்ரீ ஜகத்குரு சங்கரர் திக்விஜயஞ் செய்யத் தொடங்கி வடதி
சைக்கண் விளங்கும் மாகிஷ்மதி நகரத்து வசிக்கும் கர்மகாண்டப்

பிரவர்த்தகரான மண்டன பண்டிதரை வாதத்தில் ஜயிக்க அவரது பார்யை 'என்னையும் ஜயிக்கினன்றி ஜயம்முற்றுறாது' என்றுரைத்தவருடன் வாதித்துத் தோற்றப்பின் காமசாஸ்திரத்தில் வாதிக்க அதற்கவர் ஓர்மாத காலவரையறை கூறியோர் மலைக்குகையில் சீடர் காவலில் தன் சரீரத்தை வைத்து மரித்த அமருகராசனுடற் புகுந்து அவனது மனைவியான நூற்றுவருடன் கலந்து காம போகமனுபவித்துக் கொண்டிருக்கையில் குரு கூறிப்போன காலங் கடந்தமையால் கவலையுற்றுச் சீடரில் சிலர் பாடகவேடந் தரித்துச் சென்றவ் வரசன் முன்னின்றித் தோத்திரத்தாலேத்த லாயினர்.

1. நேதிநே தியாதி வாக்கானிடேதித்து மூர்த்தா மூர்த்த
மேதுமே தள்ளற் கில்லா வெதைச்சுவ சொரூபமாக
வோதருஞ் சாதுவானோ ருள்ளத்திற் கொள்ளுவார்க
ளாதிமெய் யறிவானந்த வவ்வத்து வன்றோ நீதான்.

2. உத்தியாங் குத்தினாலே யுமியெனு மைந்து கோசம்
புத்தியாற் பிரித்துப் பின்னர் பொருந்திடு மரிசிபோலு
மெத்தினைச் சத்துக்கள் தம் மிதயத்தி லனுபவிப்ப
ரத்தமி ளிர்க்க சித்த வவ்வத்து வன்றோ நீதான்,

3. பொறிகளாம் பரிக டம்மைப் புலன்களில் விளங்குந் தோட
வறிவெனுங் கசைய டித்தே யகமுகக் கயிற்றா லீர்த்தவ்
வறிவறி யறிஞ ரெத்தி லணைத்தொன்றாப் பிணித்தி ருப்ப
ரறிபொருட் கதீத மான வவ்வத்து வன்றோ நீதான்.

4. பூக்களி னின்று வேறாய்ப் பொருந்திடுஞ் சூத்தி ரம்போற்
சாக்கிரமாதி யான சருவத்தும் வேற தான
சாக்கியா நோக்கி யாதைச் சத்துக்க ளகத் தணைவ
ராக்கமு நீக்க மில்லா வவ்வத்து வன்றோ நீதான்,

5. கடகம குடாதி யாவுங் கனகமே யாகுமா போற்
சடசித்தா முலகம் யாவுஞ் சற்றுமே பின்ன மின்றிச்
சுடருமவ் வடிவா மென்று சொற்றிடும் வேதம் யாதை
யடிநடு முடிவில் லாத வவ்வத்து வன்றோ நீதான்.

6. இனனிலித் தனுவில் யானு யிலங்குவ னேக னேயென்
றனிசமும் வேத வாதி யாயினோர் முயற்சி யோடு
மினிமையா யெடுத்து ரைப்ப ரெத்தத்து வத்தை நன்று
யனர்த்தமி லெதார்த்த மூான வவ்வத்து வன்றோ நீதான்.

7. அருமறை வாக்கி ஞலே யகத்தினிற் சிரத்தை யோடு
மருந்தவம் யாகந் தான மாதிநல் லறங்க ளாலே
யருமறை யவர்க ளெத்தை யறிந்திட வவாவு கின்ரு
ரருமறைப் பொருளாய் நின்ற வவ்வத்து வன்ரே நீதான்.

8. சாந்திமுத லான வுற்றுச் சந்ததந் தன்ஞற் றன்னி
லாய்ந்தெதை யறிஞர் கண்டவ் வறிவின்ப மெய்யாயென்று
மீந்தெலா முடித்தொ ளிர்வுர் மிகுபவக் கேத நீத்தே
யாழ்ந்தறி தத்வ மான வவ்வத்து வன்ரே நீதான்.

இதனைக்கேட் டாசார்ய ரவர்க் குத்தாவு கொடுத் தனுப்பி விட் டெனவ் வரச னுடல் விட்டுத் தன்னுடற் புக்குச் சென் றவ்வம் மையை வென்று அவ்விருவரையுந் தனக்குள் ளாக்கி யிக்குவலய முற்றும் விளக்க முற்றனர்.

குருதுதி சம்பூர்ணம்.